**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 698/2022 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| Name : முருகானந்தம் | | Father's Name | : சோலையன் |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.01.2024

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். 21.07.2017 அன்று நான் டாடா ஏஸ் வாகனத்தில் திருமயத்திலிருந்து நேமத்தான்பட்டி மதியம் 2 மணி அளவில் சென்றுகொண்டிருந்தேன். சம்பவ நேரத்தில் நேமத்தான்பட்டி புளியமரத்து பஸ்ஸ்டாப் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து தெற்கு பக்கமாக வேகமாக ஹாரன் அடிக்காமல் சென்று சம்பவ சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த பல்சர் இருசக்கர வாகனத்தில் ஓட்டி சென்ற நபர் மீது மோதியதில் அவர் வடபக்கம் உள்ள சுவற்றில் மோதி கீழே விழுந்தார். 5மீட்டர் தொலைவில் இந்த சம்பவத்தை நான் பார்த்தேன். வேகமாக நான் ஓடிபோய் பார்த்தபோது அவர் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எங்கள் ஊரைசேர்ந்த அகிலன் என்று தெரியவந்தது. அந்த விபத்தில் அவருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. பின்னர் 108 ஆம்புலன்சில் தகவல் சொன்னேன். சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்ஸ் வந்து பார்த்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்தை ஏற்படுத்திய டாடா ஏஸ் வாகனத்தின் முன்பக்கம் இடதுபுற பம்பர் வளைந்துவிட்டது. விபத்து ஏற்பட்டவுடன் நிகழ்வு இடத்திற்கு அருகில் உள்ள 30 பொதுமக்கள் வந்துவிட்டதால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை என்னால் சம்பவ சமயத்தில் பார்க்க முடியவில்லை. மேற்படி விபத்து குறித்து அகிலன் தகப்பனாருக்கு நான் தகவல் சொன்னேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை:

போலீசார் என்னை எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மதியம் 4 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் எங்களை விசாரித்தபோது சம்பவ தேதியை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ சாலை இரண்டு பேருந்துகள் செல்லக் கூடிய அகலமான பாதை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் எந்த வாகனத்தில் வந்தேன் என்பதை தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் அந்த ரோட்டில் மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கமாக வந்துகொண்டிருந்தேன். நான் புளியமரம் பஸ்ஸ்டாப் அருகே நான் வந்தபோது விபத்தை பார்த்தேன். சம்பவ இடத்திற்கும் நான் பார்த்த இடத்திற்கும் 5மீட்டர் இடைவெளி என்பதை காவல்நிலைய விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு

சொல்லியதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையில் வந்தால் விபத்தை பார்த்திருக்கமுடியாது என்றால் சரியல்ல. எந்த வாகனத்தில் எந்த பாகம் எந்த வாகனத்தில் எந்த பாகத்தின்மீது மோதியது என்பதை என்னை விசாரித்தபோது சொல்லவில்லை. விபத்திற்கு பிறகு வாகனங்கள் எங்கு கிடந்தது என்பதையும் இறந்த நபர் எங்கு கிடந்தார் என்பதையும் போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது இறந்த நபர் வீட்டின் சுவற்றில் வண்டியோடு மோதியதாக நான் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வாகனம் வேகமாகவும், ஹாரன் அடிக்காமல் வந்தது என இறந்தவர் எனது ஊர்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை